II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No.** 377 of 2022

Deposition of witness for the Plaintiff/PW 1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 07.08.2025

| | | | |
|---|---|---|---|
| Name | : Tamil Selvan | Age | : |
| Father's / Husband's Name | : | Village | : |
| Taluk | : | Distict | : |

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி—

நான் பிரதிவாதிக்கு மொத்தமாக ரூ.41 லட்சம் கொடுத்துள்ளேன். மூன்று தவணைகளாக இந்த தொகையை கொடுத்தேன். முதல் தவணையாக ரூ.25 லட்சமும், 2வது தவணையாக ரூ.11 லட்சமும், 3வது தவணையாக ரூ.5 லட்சமும் கொடுத்தேன். வட்டியோடு சேர்த்து மொத்தம் ரூ.57 லட்சத்து சொச்சம் கொடுக்கவேண்டும். எனது வழக்குரையில் 24 சதவீதம் வட்டி கோரியுள்ளேன். தனியாக வட்டி மட்டும் எவ்வளவு ரூபாய் என்று குறிப்பாக தெரியவில்லை. 2வது தவணை ரூ.11 லட்சத்தை ரொக்கமாக கொடுத்தேன். 19.08.2020 அன்று இந்த தொகையை ஆவடி சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து கொடுத்தேன். சார்பதிவாளர் முன்பாக கொடுத்தேனா என்றால் அலுவலகத்தின் முன்பு வைத்து கொடுத்தேன். பதிவுத்துறை அலுவலகம் மாடியில் உள்ளது. 3வது தவணை ரூ.5 லட்சம் தொகையை 05.12.2020 அன்று கொடுத்தேன். இந்த தொகை வங்கி மூலமாக கொடுத்தேன். இதற்காக வங்கி கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் 2வது பக்கத்தில் வங்கி மூலமாக கொடுத்தாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது வழக்குரையில் 2வது தவணையாக ரூ.10 லட்சம் கொடுத்ததாக மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வழக்குரையில் வட்டியாக ரூ.14,76,000/- என குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால்

சரிதான். வட்டி 05.12.2020 முதல் 04.06.2022 வரை என குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். 05.12.2020 முதல் மட்டுமே வட்டியை கணக்கிட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதற்கு முன்பான வட்டியை பிரதிவாதி எனக்கு கொடுத்துவிட்டார். மூன்று தவணைகளுக்கும் இடைப்பட்ட காலத்திற்கு வட்டி வீகிதத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவற்றிற்குரிய வட்டியை கொடுத்துவிட்டதால் குறிப்பிடவில்லை. கொரோனா காலத்தில் தான் மேற்கண்ட தொகைகளை கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். மாண்பமை உச்சநீதிமன்ற வழிகாட்டுதலை மீறி கொரோனா காலத்திற்கு வட்டி கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்குரை பத்தி 7ல் டிசம்பர் 2020ல் இருந்து வட்டி கொடுக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 முதல் 3 ன் படி ஆறு மாத காலத்திற்குள் தொகையை திருப்பி செலுத்தவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆறு மாத காலத்திற்குள் வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதிக்கு அனுப்பினேனா என்றால் இல்லை. பிரதிவாதி எனக்கு வட்டி கொடுத்து வந்தார். வட்டியை ரொக்கமாக கொடுத்தார். இரண்டு சதவீத வட்டியை கொடுத்தார். எத்தனை தொகை கொடுத்தார் என்றால் முதலில் ஒரு மாதத்திற்கு ரூ.50,000/- வீதம் கொடுத்தார். முதல் ஆறு மாதத்திற்கு மொத்தம் ரூ.3,00,000/- வட்டியாக வாங்கியுள்ளேனா என்றால் ஆம். இந்த விவரத்தை எனது வழக்குரையிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் உண்மையை மறைத்து தவறான தகவலோடு வழக்குரையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் வந்து வங்கி மூலமாக கடன்பெற்று தரும்படி கேட்டார் என்றால் சரியல்ல. நான் வங்கியில் ASO-ஆக பணி புரிந்ததால் குறைந்த வட்டிக்கு பணம் பெற்று தருவதாக பிரதிவாதியிடம் சொன்னேன் என்றால் சரியல்ல. நான் வங்கி மூலமாக கடன் பெற்று கொடுத்திருந்தால் பிரதிவாதிக்கு இவ்வளவு வட்டித்தொகை வந்திருக்காது என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் வங்கி மூலம் கடன் பெற்று தரும்படி கேட்கவில்லை. எனது வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பிரதிவாதி அனுப்பிய வா.சா.ஆ.5 பதில் அறிவிப்பில் பிரதிவாதி என்னிடம் வந்து வங்கி மூலமாக

கடன்பெற்று தரும்படி கேட்டதாக கூறியுள்ளார் என்றால் சரியல்ல. நான் எனது சுய லாபத்திற்காக பிரதிவாதியை ஏமாற்றி அதிக வட்டிக்கு பிரதிவாதிக்கு கடன் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. ரூ.20,000/-ற்கு மேல் தொகையாக பணப்பரிவர்த்தனை செய்யக்கூடாது என்றால் எனக்குத் தெரியாது. அந்த தொகையை நான் கொடுக்கவில்லை என்றும் பணம் கொடுத்ததாக தவறாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 2வது தவணையை மட்டும் ஏன் தொகையாக கொடுத்தேன் என்றால் பிரதிவாதி அவ்வாறு கேட்டதால் கொடுத்தேன். நான் வருமான வரி துறையில் மறைப்பதற்காக தொகையாக கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த தொகைக்கு உரிய கணக்கு என்னிடம் இல்லை என்றால் சரியல்ல. 2வது தவணையை உண்மையிலேயே கொடுத்திருந்தால் அதனையும் வங்கி பரிமாற்றம் மூலமாக தான் கொடுத்திருப்பேன் என்றும் அந்த தொகையை கொடுக்காததால் தான் ரொக்கமாக கொடுத்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2வது தவணை தொகை கொடுக்கும் போது வெங்கடேசன் மற்றும் பெருமாள் ஆகியோர் சாட்சிகளாக உடன் இருந்தனர். 3வது தவணைக்கு சாட்சி போட்டவர் பெயர் ஞாபகம் இல்லை. அதனை வங்கி பரிவர்த்தனையாக கொடுத்தேன். இது போல மற்றவர்களுக்கு நான் பணம் ஏதும் கொடுத்ததில்லை. பிரதிவாதியிடம் கந்துவட்டியாக வட்டி வசூலித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.